


**13.08.2024**

தலைப்புச் செய்திகள்

- இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கம் தேசத்தின் பெருமையையும் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான அர்ப்பணிப்பையும் பறைசாற்றுவதாக குடியரசுத் துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்.
- நாட்டின் பொருளாதாரத்தில் மீன்வளத்துறை முக்கிய பங்காற்றுவதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு.ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.
- வளர்ந்த இந்தியா கனவு, படைப்பாற்றல் திறன், அறிவியல் சிந்தனை உள்ளிட்ட அம்சங்கள் மூலம் விரைவில் நிறைவேறும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- கோவை சூலூரில் பன்னாட்டு ராணுவ தளவாடம் மற்றும் போர் விமானங்களின் கண்காட்சியை தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி இன்று பார்வையிட்டார்.
- நீலகிரி, கோவை மாவட்ட மலை பகுதிகளில் இன்று கன, மிக கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

மூமூமூமூமூமூமூமூமூமூ

ஜக்தீப்தன்கர்

ஹர் கர் திரங்கா இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கம் தேசத்தின் பெருமையையும் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான அர்ப்பணிப்பையும் பறைசாற்றுவதாக குடியரசுத் துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத மண்டபத்தில் இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கத்தின் ஒருபகுதியாக இருசக்கர வாகன பேரணியை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், கோடிக்கணக்கான மக்கள் இதில் இணைந்துள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

75ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக மக்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டதாக அவர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் நம் நாட்டின் பெருமைமிகு மூவர்ண தேசிய கொடி மக்களை ஒருங்கிணைப்பதாக குறிப்பிட்டார்.

இதனிடையே நாடுமுழுவதும் அஞ்சலகங்களில் தேசிய கொடி விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

மக்கள் ஆர்வத்துடன் தேசிய கொடியை வாங்கி இல்லங்களில் ஏற்றி வருகின்றனர்.

மதுரை மாவட்ட அஞ்சலகங்களில் தேசிய கொடி விற்பனை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழு

குடியரசு தலைவர்

78-வது சுதந்திர தின கொண்டாட்டங்களை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாட்டு மக்களிடையே ஆற்றும் உரை அகில இந்திய வானொலியின் அனைத்து அலைவரிசைகளிலும் நாளைமாலை நேரடியாக ஒலிபரப்பாகிறது.

இதனையடுத்து நாளை இரவு மணி 7.15-க்கு ஒலிபரப்பாகும் ஆகா'வாணி செய்தியறிக்கை இரவு 8 மணிக்கு ஒலிபரப்பாகும்.

குடியரசு தலைவர் உரையின் தமிழாக்கம் இரவு ஒன்பதரை மணிக்கு ஒலிபரப்பப்படும்.

சுதந்திர தினத்தன்று பிரதமர் திரு. நரேந்திரமோடி செங்கோட்டையில் கொடியேற்றும் நிகழ்வு காலை 7 மணியிலிருந்து ஆகா'வாணியின் அனைத்து அலைவரிசைகளிலும் நேரடி ஒலிபரப்பு செய்யப்படும்.

பிரதமரின் சுதந்திர தின உரையின் தமிழாக்கம் அன்றிரவு மணி 9.30 க்கு ஒலிபரப்பு செய்யப்படும்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ராஜீவ் ரஞ்சன் சிங்

மீனவர்களின் பாதுகாப்பிற்காக மீன்பிடி படகுகளின் ஒரு லட்சம் ட்ரான்ஸ்பாண்டர்கள் பொருத்தப்படும் என்று மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு.ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மீன் வளத்துறையில் விண்வெளி தொழில்நுட்ப பயன்பாடு குறித்த தேசிய கருத்தரங்கில் உரையாற்றிய அவர், மீனவர்கள் கடல் எல்லையை தாண்டும்போது இந்த ட்ரான்ஸ்பாண்டர்கள் உரிய எச்சரிக்கையை விடுக்கும் என்று கூறினார்.

தேச பொருளாதாரத்தில் மீன்வளத்துறை முக்கிய பங்காற்றுவதாக கூறிய அவர் இத்துறையின் மேலாண்மை மற்றும் மேம்பாட்டில் விண்வெளி தொழில்நுட்பங்கள் பெரிதும் பயனளிப்பதாக கூறினார்.

நம் நாட்டில் இருந்து 60 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமான மீன் உற்பத்தி பொருட்கள் ஆண்டுதோறும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மீன்வளம் சார்ந்த வர்த்தகத்தில் 3 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஈடுபட்டிருப்பதாக கூறிய அவர் மீனவர்களின் வாழ்வாதார மேம்பாட்டில் அரசு உறுதியுடன் இருப்பதாக குறிப்பிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

சீதாராமன்

இந்தியாவை வளர்ந்த தேசமாக மேம்படுத்த படைப்பாற்றல் திறன் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் துரித தீர்விற்கு மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அழைப்பு விடுத்துள்ளார்.

போபாலில் இந்திய அறிவியல் ஆராய்ச்சி கல்வி நிறுவனத்தின் 11ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர் அறிவியலும், ஆராய்ச்சியும், சமூக மேம்பாட்டிற்கு பங்களிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தற்போதைய தேவையாக உள்ளது என்று கூறிய அவர் மாணவர்கள் இதற்கான வள ஆதாரங்களை பயன்படுத்தி எரிசக்தியை சேமிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேம்படுத்தப்பட்ட வேதியியல் வளர்ச்சியின் மூலம் எரிசக்தி தேவைகள் கையாளப்பட வேண்டும் என்றார்.

அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலமே வளர்ந்த நாடாக நம் தேசத்தை மேம்படுத்த முடியும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கடல் சார் பாதுகாப்பு

இந்திய - ஆஸ்திரேலிய கடல் சார் பாதுகாப்பு 6ஆவது சுற்று பேச்சுவார்த்தைகள் ஆஸ்திரேலிய தலைநகர் கான்பராவில் இன்று நடைபெற்றன.

மத்திய வெளியுறவுத்துறையின் சர்வதேச பாதுகாப்பு விவகாரங்களுக்கான கூடுதல் செயலர் ஆரயெ ீரனை ளுயனை யுறனை மற்றும் ஆஸ்திரேலிய வெளியுறவு செயலர் சாரா ஸ்டோரி ஆகியோர் இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.

உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சர்வதேச நலத்திற்கு சாதகமான கடல் சார் சூழலை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் இதில் இடம்பெற்றன.

பரஸ்பர நலன் சார்ந்த திட்டங்கள் இந்தோ பசுபிக் பிராந்திய பாதுகாப்பு, கடல்சார் விழிப்புணர்வு, பேரிடர் மீட்பு மற்றும் நிவாரணங்களில் ஒருங்கிணைப்பு, மாசு கட்டுப்பாடு, நீலப்புரட்சி, துறைமுக கட்டுப்பாடு ஆகியவை குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

சூரிய வீடு

பிரதமரின் சூரிய மின் சக்தி வீடுகள் கட்டமைப்பு திட்டத்தின் கீழ் மாதிரி சூரிய எரிசக்தி கிராம செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ளது.

இந்த திட்டத்திற்காக 800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஒவ்வொரு மாதிரி கிராமத்திற்கும் ஒருகோடி ரூபாய் அனுமதிக்கப்படும் என்று கூறியுள்ளது.

ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட வருவாய் கிராமம் இந்த திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்கள் ஆய்வு செய்யப்பட்டு நிதி அனுமதிக்கப்படும் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

சூரிய மின்தகடு திறனை மேம்படுத்தி குடியிருப்புகளில் மின்சக்தி உற்பத்தி ஆளுமையை அதிகரிக்கும் வகையில் கடந்த பிப்ரவரி மாதம் மத்திய அரசு இந்த திட்டத்திற்கான ஒப்புதலை வழங்கியது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கோவை சூலூர்

கோவை சூலூர் விமான படைத்தளத்தில் தரங் சக்தி 2024 பன்னாட்டு ராணுவ தளவாடங்கள் மற்றும் போர் விமானங்களின் கண்காட்சி இன்று தொடங்கியது.

தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி,

விமான படை தளபதி வி.ஆர். சவுத்ரி

பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி முகமையின் தலைவர் திரு. சமீர் கமத் உள்ளிட்டோர் இதனை பார்வையிட்டனர்.

62 அரங்குகளில் பொதுத்துறை மற்றும் தனியார் ராணுவ தளவாடங்களின் உற்பத்தியாளர்களின் தயாரிப்புகள் இதில் காட்சிபடுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நாளை மறுநாள் இக்கண்காட்சியை பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் தொழில் முதலீடுகள் தொடர்பாக அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இந்த கூட்டத்டதில் தமிழ்நாட்டில் 44 ஆயிரத்து 127 கோடிரூபாய் மதிப்பிலான 15 முதலீடுகளுக்கு அமைச்சரவைக்கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் 24 ஆயிரத்து 600 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வகை செய்யப்ப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு ஸ்ரீபெரும்புதூரில் 706 கோடிரூபாய் மதிப்பீட்டில் மகளிருக்காக அமைக்கப்பட்டுள்ள விடுதி வரும் 17 ஆம் தேதி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

காவிரி ஒழுங்காற்று குழு

காவிரி ஒழுங்காற்று குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

காணொலி மூலம் நடைபெற்ற இக்கூட்டத்தில் செப்டம்பர் மாதத்திற்கு தேவையான நீர் பகிர்வு குறித்து ஆலோசிக்கப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

சுரேஷ் கோபி

சிவகாசியில் மத்திய பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டுத்துறை சார்பில் பட்டாசு தொழில் பாதுகாப்பு குறித்த கலந்துரையாடல் கூட்டத்தில் மத்திய பெட்ரோலியம் இயற்கை எரிவாயுத்துறை இணை அமைச்சர் திரு.சுரேஷ் கோபி இன்று பங்கேற்றார்.

மத்திய வெடி பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் முதன்மை அதிகாரி திரு.குமார் தலைமையில் இந்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதி திராவிடர் பழங்குடியின மாணாக்கர் தாட்கோ மூலம் பட்டப்படிப்பு டிப்ளமா பயில விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் வகுப்பினர் நவீன சலவையகம் அமைக்க அரசு வழங்கும் மானியத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் டாக்டர் உமா கேட்டுக்கொண்டுள்ளார்.

அரியலூர் மாவட்ட சுகாதாரத்துறை சார்பில் எயிட்ஸ் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி இன்று தொடங்கிவைத்தார்.

தூத்துக்குடியில் பள்ளி மாணாக்கர் பங்கேற்ற மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.லட்சுமிபதி இன்று தொடங்கிவைத்தார்.

கன்னியாகுமரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு திருமண நிதி உதவிகளை ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா இன்று வழங்கினார்.

திருவாரூர் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க விரும்பும் பள்ளி கல்லூரி மாணாக்கர் வரும் 25ஆம் தேதிக்குள் இணையதளத்தில் பதிவு செய்யுமாறு ஆட்சித்தலைவர் திருமதி சாருஸ்ரீ அறிவுறுத்தியுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அண்ணா விளையாட்டரங்கில் சுதந்திர தினத்தை ஒட்டி 300க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பங்கேற்ற அணிவகுப்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

ழுழுழுழுழுழுழுழுழு

மேட்டூர்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று 45 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

டெல்டா பாசனத்திற்கு 21 ஆயிரத்து 500 கன அடியும்,

16 கண் மதகுகள் வழியாக 14 ஆயிரம் கன அடி நீரும் திறக்கப்படுகிறது.

இதனிடையே முக்கொம்பு மேலணையிலிருந்து கொள்ளிடம் ஆற்றில் நாளை காலை 6 மணிக்கு 10 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட உள்ளதால் கொள்ளிட கரையோர மக்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 43 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

திருப்பூர் மாவட்டம் அமராவதி மற்றும் தேனி சோத்துப்பாறை அணையிலிருந்து உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதால் இதற்குட்பட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழு

வேலூர் வாய்ஸ்

வேலூர் மாவட்டத்தில் இரவு நேரங்களில் தொடரும் கனமழையால் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வேளாண் பயிர்கள் சேதமடைந்துள்ளன.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.... வாய்ஸ் ......

ழுழுழுழுழுழுழுழுழு

டென்னிஸ்

போலந்து சர்வதேச சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் இன்று சுவிட்சர்லாந்தின் டோம்னிக் ஸ்ட்ரிக்கரை எதிர்கொள்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி, கோவை மாவட்ட மலை பகுதிகளில் இன்று கன, மிக கன மழையும்,

தேனி, திண்டுக்கல், ஈரோடு, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கன மழையும் பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோர பகுதி, குமரிக்கடல் பகுதி, மத்திய வங்க கடலின் தெற்கு பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 5 நாட்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், குமரி, நெல்லை, ராமநாதபுரம், விருதுநகர் சிவகங்கை மாவட்டங்களில் அடுத்த சில மணி நேரங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது